பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 156

வியாழக்கிழமை
01 மே 2025

சித்திரை 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056






# ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை இலங்கைக்குக் கிடைக்கும்

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் ஜனாதிபதி அநுரவிடம் தெரிவிப்பு

கொழும்பு, மே 1

ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பில் இலங்கைக்குச் சாதகமாகவே தீர்மானங்கள் கருத்திற்கொள்ளப்படும். அத்துடன், தரமான பொருள்களை ஐரோப்பிய ஒன்றியத்தில் சந்தைப்படுத்த இலங்கைக்கு ஊக்கமளிக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிரிவுக்கான தலைவர் சாள்ஸ் வைட்லி, ஜனாதிபதி அநுரவிடம் தெரிவித்துள்ளார்.

11

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு

## பல்கலை மாணவர்களுக்கு மூன்று நாள்கள் விடுமுறை

யாழ்ப்பாணம், மே 1

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மூன்று நாள்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

11

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் மேதின நிகழ்வுகள் யாழில்

யாழ்ப்பாணம், மே 1

தமிழ்த் தேசியக் கட்சிகளின் மேதினப் பேரணிகளும் கூட்டங்களும் இன்று இடம்பெறவுள்ளன என்று தெரியவருகின்றது. இதன்படி, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மேதினக் கூட்டம் யாழ்ப்பாணம்

04

## அத்துமீறிய மீன்பிடி கட்டுப்படுத்தப்படும்!

### அமைச்சர் சந்திரசேகர் வாக்குறுதி

யாழ்ப்பாணம், மே 1

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர்

11

## வாக்காளர் அட்டைகள் கடையொன்றில் மீட்பு!

### தபால் ஊழியர் உட்பட இருவர் கைது



வவுனியா, மே 1

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில், ஒரு தொகை வாக்காளர் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன. இதையடுத்து அந்தக் கடையின் உரிமையாளரும் தபால் ஊழியர் ஒருவரும்

11

நான்கே மாதங்களில்

## டெங்கு 17,000!

கொழும்பு, மே 1

இந்த வருடத்தில் முதல் நான்கு மாதங்களில் மட்டும் இலங்கையில் 17 ஆயிரம் பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது

04

## எரிபொருள்கள் விலைகுறைப்பு

பெற்றோலுக்கு 6/=
டீசலுக்கு 12/=
ம.எண்ணெய்க்கு 5/=

கொழும்பு, மே 1

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த விலைச்சூத்திரத்தின்

11

## எரிவாயு விலை மாற்றமில்லை!

கொழும்பு, மே 1

லாப்ஸ் எரிவாயு விலையில் எந்த மாற்றமும் இல்லை என்று லாப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய லாப்ஸ் எரிவாயு சிலிண்டரின் விலை 4 ஆயிரத்து 100 ரூபாவாகவும் 5 கிலோகிராம் நிறையுடைய

11

## பிள்ளையான் வாய்திறந்தால் பலருக்குச் சிறைதான் கதி!

### ரில்வின் சில்வா எச்சரிக்கை



கொழும்பு, மே 1

பிள்ளையான் வாய்திறக்க ஆரம்பித்தால் பலர் சிறைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். இதனால், ஆட்சியைக் கவிழ்ப்

11



முச்சந்தி முராரி

‘தொழிலாளர் தினத்தை வைச்சு வாக்குக் கேக்கிற விளையாட்டு எப்பதான் முடியப்போகுதோ?’

## வீதியில் சென்றவர் மயங்கி வீழ்ந்து பலி

யாழ்ப்பாணம், மே 1

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த நபரொருவர், நேற்று நண்பகல் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரி

11

## கூரைவேய ஏறியவர் தவறி விழுந்து பலி

யாழ்ப்பாணம், மே 1

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்புப் பகுதியில் வீட்டுக்கூரையை வேய்வதற்காக ஏறியவர், தவறி வீழ்ந்து

11

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில்

## நிர்வாகச் சீர்குலைவை எதிர்த்து மருத்துவர்கள் நாளை போராட்டம்

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும், மருத்துவமனையில் நிலவும் நிர்வாகச் சீர்குலைவுகளைக் கண்டித்தும் நாளை காலை 8 மணிமுதல் நாளைமறுதினம் காலை 8 மணிவரை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்ததாவது:-

ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி இரவு, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.05.2025 வியாழக்கிழமை

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 30.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4059 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 04 68 71 73 |
| விசேட எழுத்து | T |

**ஹந்தஹனை ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 30.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1126 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 04 17 20 49 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 30.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0085 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 0 1 7 5 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 30.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2165 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 06 14 18 22 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 30.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5817 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 2 7 6 7 5 8 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 30.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1847 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 04 21 42 52 |
| விசேட எழுத்து | O |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 30.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0392 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 6 7 5 8 |

**சுபிரி தன சம்பத** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 30.04.2025 | புதன்கிழமை | 0525 | H | 1 3 6 4 3 9 |

**Super Ball** (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 30.04.2025 | புதன்கிழமை | 2791 | T | 03 12 35 45 |

**சனிதா** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 30.04.2025 | புதன்கிழமை | S | 14 27 59 67 | 4952 |

**லக்ன ராசி** (DLB)

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 30.04.2025 | புதன்கிழமை | கும்பம் | 10 23 34 58 | 4503 |

**KAPRUKA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 30.04.2025 | புதன்கிழமை | P | 23 | 06 08 39 63 | 1967 |

**அத கோடிபதி** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 30.04.2025 | புதன்கிழமை | Z | 17 31 57 62 | 2617 |

**JAYODA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 30.04.2025 | புதன்கிழமை | Z | 07 23 26 28 | 2123 |

# மருந்துப் பிரச்சினைகளுக்கு இராஜதந்திரரீதியில் தீர்வு!

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 1**

**மருந்து விநியோகஸ்தர்கள் முறையாகப் பணியாற்றாமை காரணமாக மருந்து இறக்குமதி தொடர்பில் அரசாங்கம் நேரடியாக தலையிட்டு இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடி வெளிநாடுகளிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்து நாட்டுக்குத் தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படுகின்றது என்று சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேவையான மருந்துகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவ தற்காக 07 நாடுகளுடன் கலந்துரையாடிவருகிறோம்.

எனவே, எதிர்வரும் 03 - 06 மாதங்களுக்கு மருந்துகளை களஞ்சியப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி மூன்றரை மாதங்களுக்குத் தேவையான இன்சுலினை நாட்டுக்குக் கொண்டுவந்தோம். மேலும் இரண்டு மாதங்களுக்குத் தேவையான இன்சுலின் தொகை நாட்டை வந்தடையும்.

மருந்து விநியோகத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இல்லை என்று கூறமுடியாது. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட கொள்முதல்களின் பிரச்சினைகளை தற்போது நாம் எதிர்கொள்கிறோம்.

ஒருசில மருந்துத் தொகையை நன்கொடையாகவும் நாடுகளுக்கிடையிலான இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

விநியோகஸ்தர்கள் முறையாகப் பணியாற்றாதுவிட்டமையால் நாங்கள் தலையிட்டு இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடி அந்த நாடுகளிலிருந்து மருந்துகளை இறக்குமதிசெய்ய நேர்ந்துள்ளது - என்றார். (ச-இ)



## முறைப்பாடுகள் 3000+

கொழும்பு, மே 1

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வரை 3,464 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

## வாகனங்களை ஒப்படைத்த முன்னாள் ஜனாதிபதிகள்

கொழும்பு, மே 1

முன்னாள் ஜனாதிபதிகள் ஐந்து பேரில் நான்கு பேர் தற்போது தங்களது மேலதிக வாகனங்களை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைத்துள்ளனர் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைத் தவிர, ஏனைய அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளும் வாகனங்களை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைத்துள்ளனர் என்று ஜனாதிபதி செயலகத்தின் மூத்த செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தால் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட மூன்று வாகனங்களில் ஒன்றை மீள வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளரின் எழுத்துப்பூர்வ அறிவிப்பின்படி இந்த வாகனங்கள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## ஐ.ம.ச. ஆட்சியிருந்தால் அமெ. வரி விதிக்காது!

### ஜகத் விதான எம்.பி. கண்டுபிடிப்பு

கொழும்பு, மே 1

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இருந்திருந்தால் இலங்கை மீது அமெரிக்கா வரிவிதித்திருக்காது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்வில் 'பிரதான எதிர்க்கட்சிதான் நிழல் அரசாங்கம். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 44 சதவீத வரி விதிக்கப்பட்டிருந்தால் எப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும்" என்ற கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் அப்படியான வரி விதிக்கப்படும் என நான் நம்பவில்லை. ஏனெனில் சிறந்த வெளிநாட்டுத் தொடர்புகள் உள்ளன. அமெரிக்காவுடன் நேரடியாக பேச்சு நடத்தும் இயலுமையும் உள்ளது.

இலங்கையானது முழுமையாக இந்தியா பக்கம் சாய்வதால் கூட இப்படி வரிவிதிக்கப்பட்டிருக்கக்கூடும். அமெரிக்கா மற்றும் இந்திய[illegible] கொள்கையையே பின்[illegible] என்றார். (எ-44)

## இலங்கையை இலக்குவைத்து வரி விதிக்கவில்லை அமெரிக்கா

### பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 1

இராஜதந்திர பிரச்சினையாலோ அல்லது இலங்கையை இலக்குவைத்தோ அமெரிக்காவால் வரிவிதிக்கப்படவில்லை என்று பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

அமெரிக்காவின் பரஸ்பர வரிவிதிப்புத் தொடர்பில் தெரிந்தோ அல்லது தெரியாமலோ சிலர் தவறான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கையுடனான இராஜதந்திரப் பிரச்சினை காரணமாக அமெரிக்காவால் வரி விதிக்கப்படவில்லை. முழு உலகுக்கும் பரஸ்பரவரி விதிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு நாடும் இலக்கு வைக்கப்படவில்லை. அமெரிக்காவின் வரிவிதிப்புத் தொடர்பில் முன்கூட்டியே நடவடிக்கை எடுத்ததால்தான் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரி விதித்த கையோடு, 3 ஆம் திகதி நாம் கலந்துரையாடலை ஆரம்பித்தோம். அமெரிக்காவுக்குக்கூட குழுவொன்று சென்று கலந்துரையாடல் நடத்தியது. தெற்காசியாவில் இந்தியாவுக்கு அடுத்தப்படியாக இலங்கையே துரிதமாகச் செயற்பட்டுள்ளது என அமெரிக்கா கூடப்பாராட்டியுள்ளது - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினப் பேரணிகளில் பலம்காட்டும் கட்சிகள்

**கொழும்பு, மே 1**
**உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் அமோக ஆதரவைப் பெறும் வகையில், ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் இன்று மேதினப் பேரணிகளை நடத்தவுள்ளன.**

சர்வதேச தொழிலாளர் தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி மே தினக் கூட்டத்தை பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு காலிமுகத்திடலில் நடத்தவுள்ளது. நாட்டைக் கட்டியெழுப்பும் மக்கள் சக்தி அணிதிரளும் மேதினக் கூட்டம் எனும் தொனிப்பொருளில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர்கள் உட்பட தேசிய மக்கள் சக்தியின் பிரமுகர்கள் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

எதிர்க்கட்சியில் இருந்தபோது மே தினக் கூட்டத்தையும், பேரணியையும் மிகவும் நேர்த்தியான முறையில் நடத்தும் கட்சி என்ற பெருமையை ஜே.வி.பி. பெற்றிருந்தது. இம்முறை முதல்முறையாக ஆளுங்கட்சி என்ற அந்தஸ்துடன் மே தினக் கூட்டத்தை அந்தக் கட்சி நடத்துகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் இணைந்து மேதினக் கூட்டத்தையும், பேரணியையும் தலவாக்கலையில் நடத்தவுள்ளது.

'ஏமாந்தது போதும், தற்போது விழித்தெழுவோம்' எனும் தொனிப்பொருளில் பெரமுனவின் மேதினப்பேரணி நுகேகொடவில் நடைபெறவுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மருதானையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளது. முன்னிலை சோஷலிசக் கட்சியின் மே தினக் கூட்டம் கிருளப்பனையில் நடைபெறவுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலேயே பிரதான கட்சிகளின் மே தினக் கூட்டம் நடைபெறுகின்றது. இதனால் கொழும்பு மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (ம44)

# மன்னாரில் மேதினப் பேரணி

மன்னார், மே 1

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறை, வளச்சுரண்டல்களுக்கு எதிராகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரியும் மே தின நிகழ்வுகள் இன்று மன்னார் பஜார் பகுதியில் இடம்பெறவுள்ளன என மக்கள் திட்ட வரைபு ஒன்றியத்தின் வட மாகாண பொதுச் செயலாளர் நடராஜா தேவகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். அதற்கமைய மே தின ஊர்வலம் பிற்பகல் 2 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி மருத்துவமனை வீதியூடாக மன்னார் பஜார் பகுதியைச் சென்றடையும். பின்னர் அங்கு மேதினக் கூட்டம் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-56)

# வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், மே 1

அச்சுவேலி வடக்கு அருள்மிகு ஸ்ரீ சித்திர வேலாயுதர் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை நிறைவடையவுள்ளது. 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் 12ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனமும் நடைபெறுமென ஆலயத்தின் தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ச-25)

# சஜித் ஜனாதிபதியாவது சாத்தியமற்ற விடயம்

*ஐக்கிய மக்கள் சக்தியே தெரிவிப்பு*

கொழும்பு, மே 1

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஜனாதிபதியாவார் எனக் கூறப்படுவது நடைமுறை சாத்தியமற்ற விடயமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தெரிவித்துள்ளார்.

சஜித்தை எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஜனாதிபதியாக்குவோம் என கபீர் ஹாசீம் உட்பட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கூறுவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே அந்தக் கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஜகத் விதான தெரிவித்துள்ளதாவது:-


ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுவில் நான் அங்கம் வகிக்கின்றேன். சஜித்தை டிசெம்பரில் ஜனாதிபதியாக்கும் விடயம் பற்றி அங்கு எதுவும் பேசப்படவில்லை. கபீர் ஹாசீம் தனது தனிப்பட்ட கருத்தை வெளியிட்டிருக்கலாம். அது உண்மையான கதை கிடையாது. கற்பனை அடிப்படையில் தெரிவிக்கப்பட்ட கருத்தாகும். அது தவறு என்றே நான் கூறுகின்றேன்- என்றார். (எ-44)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 06 - 1951



மறைவு 28 - 04 - 2025

## சின்னத்துரை - தங்கராஜா (JP)

யாழ் பல்கலைக்கழகம் முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கராஜா அவர்கள் (28.04.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-செல்லம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம்-துரையம்மாவின் மருமகனும், விஜயராணியின் அன்புக்கணவரும் விஜயதர்சினி, சசிகலா (பிரான்ஸ்), அகல்யா (கனடா), ஆரணி (முகாமைத்துவ உதவியாளர்-யாழ் பல்கழைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தகப்பனும், காலஞ்சென்ற சிவகுமார், பத்மசேகர் (பிரான்ஸ்) யுவனேசன் (கனடா), தர்மிலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்தூரி (யாழ் பல்கழைக்கழக மாணவி - நுண்கலைப்பீடம்), கிஷ்யந்தன் (DFCC வங்கி ஊழியர்), லக்ஸன், அபிசன், அக்சிகா, அபிரா, பானுஜன், தினேஜா ஆகியோரின் பேரனும், இரத்தினம், அமரர் கமலபூரணி கனகமணி, பிறைசூடி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராணி, ஜெயராணி, சிவசுப்பிரமணியம், தவபாலன் (அமரர்), இந்திராணி, பத்மராணி, புஷ்பராணி, ஜெயபாலன், சண்முகபாலன், இராமலிங்கம், சண்முகநாதன், பாலசுப்பிரமணியம், மலர் ஆகியோரின் மைத்துனரும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**T P NO - 0761964959**
**0212221882**

நாவலடி லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(CS/58135) J-1




# நேர்முக வர்ணனை

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவன் திடற்புலம் அருள் மிகு ஸ்ரீ நரசிங்க வைரவர் தேவஸ்தான வருடாந்த தீமிதிப்பு உற்சவத்தை முன்னிட்டு தேவஸ்தானப் பிரதான மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளை வெள்ளிக்கிழமை வரை காலை 6.30 மணிக்கு சிவ நெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நேர்முக வர்ணனை இடம்பெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை சைவப்புலவர், பிரசங்கபூஷணம் செ. த. குமரன் மற்றும் இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் ஆகியோரும் நாளை வெள்ளிக்கிழமை சைவப்புலவர், பிரசங்கபூஷணம் பொன். சந்திரவேலும் நேர்முக வர்ணனையை வழங்கவுள்ளார்கள். (ச-41)



## சென்னையைத் தோற்கடித்து பிளேஓவ் வாய்ப்பை தக்கவைத்த பஞ்சாப்

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், சென்னையைத் தோற்கடித்து பிளேஓவ் வாய்ப்பை தக்கவைத்தது பஞ்சாப்.**


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சாம் கரன் 88 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் சஹல் ஹற்றிக் உட்பட 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணி 19.4 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அணித்தலைவர் ஸ்ரேயஸ் 72 ஓட்டங்களைப் பெற்றார். (ம)

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 06 . 1941



மறைவு 30 . 04 . 2025

## நல்லதம்பி இராஜேந்திரம்

யாழ்ப்பாணம், நீராவியடி 28, பிறவுண் வீதி, 1ம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி இராஜேந்திரம் அவர்கள் நேற்று (30.04.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும், ஐயங்கர்-வள்ளிப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகனும் கமலாவதியின் அன்பு கணவரும் நிக்ஷன் (கனடா), சுமதி (கனடா), சுஜீவா (சுகாதார அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பிரபாமணி (கனடா), ரமேஸ் (கனடா), சிவரஞ்சிதன் (மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்-யாழ் மாவட்ட செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காவியா, ரெனீஷா, யனுசன், சொகில்ஷன், மதுசிகா, ஆரணன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், இராசையா, மங்கயர்க்கரசி, மகேஸ்வரி மற்றும் கமலநாயகி, அருணகிரிநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, குமாரசாமி, மகேஸ்வரி மற்றும் இராசரத்தினம், குலவீரசிங்கம், சிவனேசு, லகுலராஜா, ரகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2025) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல்இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**நிக்ஷன்-மகன்-001 514 9694187**
**சுமதி-மகள்-001 647 2399430**
**சுஜீவா-மகன்-077 607 9283**
**சிவரஞ்சிதன்-மருமகன்-077 691 0513**

தகவல்:
குடும்பத்தினர்

# 48ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 07 . 1950



மறைவு 01 . 05 . 1977

## அமரர் குமரையா தேவராஜன்

மே மாதமே
நீங்கள் எங்களைப் பிரிந்தாலும்
நீங்கள் எங்களுடன் இருப்பதை நாங்கள் ஒவ்வொரு நிமிடமும் உணருகின்றோம்

*அன்புடன் அஞ்சலி செலுத்தும்*

மனைவி
மகன்மார்
மருமகள்மார்
பேர்த்தி - சன்றல் -சென்ற
பேரன்மார்கள் - சஞ்சேஸ் தேவராஜன்
ராஜன் தேவராஜன்
ஜெய்ல்டன் தேவராஜன்
சவ்ரோ தேவராஜன்
அஸ்ரன் தேவராஜன்

[illegible] அவனியு,
[illegible], யாழ்ப்பாணம்.

(CS/58123)

## தமிழ்த்...

வீரசிங்கம் மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு, கட்சியின் பதில் தலைவர் சி.வீ. கே. சிவஞானத்தின் தலைமையில் இடம் பெறவுள்ளது.

அத்துடன், தமிழ்த் தேசியப் பேரவையினரின் மேதினக் கூட்டம் யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மன்றத்தில் மாலை 3 மணியளவில் இடம் பெறவுள்ளது. (அ-ம-26)

## டெங்கு...

என்று தேசிய சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

17 ஆயிரம் தொற்றாளர்களில் 46 வீதமானவர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர். இது வரை ஆறு பேர் டெங்குத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். அத்துடன், ஏப்ரல் மாதத்தில் மட்டும் 5 ஆயிரத்து 18 டெங்குத் தொற்றாளர்கள் நாட்டில் பதிவாகியுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

யதார்த்தத்துக்கு எதிரான போரில்
கற்பனை மட்டுமே ஒரே ஆயுதம்.
—லூயிஸ் கரோல்—

# ஆபத்தை நோக்கி அழைக்கிறது சீனம்!

அமெரிக்கா முன்னெடுக்கும் வர்த்தகப்போர் காரணமாக இலங்கையின் உரிமைகள் குறைமதிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஒருதலைப்பட்சமான இந்தப் பொருளாதாரப் போக்குகளை அடியோடு நிராகரிப்பதற்கு இலங்கை துணியவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் இலங்கைக்கான சீனத்தூதுவர் சென்ஹொங். அமெரிக்காவுக்கு எதிரான வர்த்தகப் போரை எதிர்கொள்ளவும், மாற்றுப் பொருதாரச் சக்தியாக உருவெடுக்கவும் உலக நாடுகளை சீனா அண்மைக்காலமாக ஒன்றுதிரட்டிவருகின்றது. அதன் தொடர்ச்சியாகவே, சீனத்தூதுவரின் கருத்துகள் அமைந்துள்ளன.

இலங்கையொன்றும் தன்னிறைவு கண்டுள்ள நாடோ அல்லது பொருளாதாரத் தளம்பலற்ற நாடோ அல்ல. அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் வாரி வழங்கும் வரிச்சலுகைகளால்தான் இந்த நாட்டின் பொருளாதாரம் இயங்கிக்கொண்டிருக்கின்றது. அமெரிக்காவின் வரிச்சலுகைகள் இல்லாவிட்டால், அது இலங்கையின் பொருளாதாரத்தில் ஏராளமான தாக்கங்களை ஏற்படுத்தும் எனும்போது, அமெரிக்காவுக்கு எதிரான மாற்றுக் கூட்டணிக்குள் நுழைந்தால் அதன் தாக்கம் எவ்வளவு பெரியதாக இருக்கும் என்பது குறைந்தபட்சப் புரிதலுக்கு உட்பட்ட விடயமே. எனவே, உலகப் பொருளாதாரத்தில் இரண்டாம் இடத்தில் உள்ள சீனா, அமெரிக்காவைத் தாக்கவும் எதிர்க்கவும் துணியலாம். அதற்காக, அபத்தமான கருத்துக்களை வெளியிட்டு, மிகச் சிறிய பொருளாதாரச் சுழற்சியைக் கொண்ட நாடுகளை ஆபத்தில் சிக்கவைக்கக் கூடாது.

அத்துடன், இராஜாங்க ரீதியில் ஏற்படும் சிக்கல்களையும் சடுதியான தேவைப்பாடுகளையும் நிறைவேற்றுவதற்காகத்தான் ஒவ்வொரு நாடும் மற்றைய நாடுகளில் தூதரகங்களை அமைத்துத் தூதுவர்களைநியமிக்கின்றன. சர்வதேச உறவுகளை வலுப்படுத்தவும், நாடுகளுக்கு இடையிலான இருதரப்புப் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதும்தான் தூதரகங்களின் பயன்பாடாகவும் காணப்படுகின்றது. ஆனால், இலங்கைக்கான சீனத்தூதுவர் சென்ஹொங் தன் அதிகார வரையறையை அவ்வப்போது அளவுகடந்து மீறுகின்றமை வெளிப்படையாகத் தெரிகிறது. ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்ததும், ஏனைய தூதுவர்கள் புதிய அரசாங்கத்தை வாழ்த்தும் போது, சீனத் தூதுவரோ இலங்கை மக்களின் மாற்றுத் தெரிவை வரவேற்றதுடன் அதைச் சரியானது என்றும் சான்றுப்படுத்தினார். குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்களின் முடிவுகளை வர வேற்றார். கேந்திர அமைவிடம் காரணமாக இலங்கை இயல்பாகவே பிராந்தியப் பதற்றத்துக்குள்ளும், உலக ளாவிய பதற்றத்துக்குள்ளும் சிக்கிக்கொள்ளும் வாய்ப் புகள் உள்ளநிலையில், சீனத்தூதுவர் வெளிப்படுத்திய தேர்தல் முடிவுகள் தொடர்பான கருத்துகள் வெறுக்கத் தக்கவையாக இருந்தன. இதன் தொடர்ச்சியாகவே, தற்போது அமெரிக்காவுக்கு எதிரான மாற்றுத் தெரிவுகள் தொடர்பான அவருடைய கருத்துகள் அமைந்துள்ளன.

சீனத்தூதுவரின் கருத்துகளை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கண்டித்தாலோ அல்லது, அமெரிக்கப் பொருளாதாரப் போக்குக்குள் இலங்கையை வலிந்து தண்டிக்கும் நடவடிக்கைகளை எடுத்தாலோ அதனால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பு மிகக் கனதியாகவே அமையும். எனவே, இலங்கைக்கான சீனத் தூதுவர் சென்ஹொங்கின் நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் வலுவாகக் கண்டிக்க வேண்டும். ஏனெனில், அவர் மிகநுணுக்கமாக இலங்கையை ஏதோவொரு கூட் டணிக்குள் அழைத்துச் செல்வதோடு, அமெரிக்கா விடமிருந்து பிரிக்க வும் முயல்கிறார். இதனை முளை யிலேயே கிள்ளாவிட்டால் இலங்கை மிகப்பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலை வந்து விடும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# மின்சார செலவை ஈடுகட்ட நாணயநிதியம் கிடுக்கிப்பிடி

கொழும்பு, மே 1

**மின்சாரத்துக்கான உற்பத்திச் செலவை விட அலகொன்றுக்காக பாவனையாளரிடம் அறவிடும் தொகை குறைவாக இருப்பதால் அரசுக்கு நஷ்டமேற்படுகிறது. எனவே உற்பத்திச் செலவை ஈடுகட்டும் வகையில் மின்கட்டணத்தை நிர்ணயிக்குமாறு சர்வதேச நாணயநிதியம் இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது.**

இது நிதி ஆபத்துகளைக் குறைப்பதற்கும், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வை வெற்றிகரமாக முடிப்பதற்கும் அவசியமானது என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பணித் தலைவர் இவான் பாபஜெர்ஜியோ சுட்டிக்காட்டியுள்ளார். நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் மூலம், சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட உடன்படிக்கையைப் பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகசபையின் அங்கீகாரம் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மின்னுயர்த்தி வீழ்ந்து இளைஞர் பலி

கொழும்பு, மே 1

கட்டடமொன்றில் மின்னுயர்த்தி (லிப்ட்) இடிந்து விழுந்ததில் குறித்த வணிக வளாகத்தில் பணிபுரிந்த 29 வயதுடைய இளைஞர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் காலி, பேருந்து நிலையத்துக்கு அருகே நேற்று முன்தினம் நடந்துள்ளது. (ச-இ)

## சுவிஸ் தூதுவரின் இல்லத்தில் திருட்டு

கொழும்பு, மே 1

இலங்கைக்கான சுவிஸ் தூதரின் உத்தியோகபூர்வ இல்லத்திலுள்ள பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் நான்கரை மில்லியன் ரூபா மதிப்புள்ள இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட தங்க மோதிரங்கள், கழுத்தணிகள் மற்றும் பதக்கங்கள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## உலகின் மிகப்பெரிய சரக்குக் கப்பல் இலங்கையில் நங்கூரம்

கொழும்பு, மே 1

உலகின் மிகப்பெரிய சரக்குக் கப்பல்களில் ஒன்றான எம்.எஸ்.சி. மரில்லாக் கப்பல், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு சர்வதேச சரக்கு முனையத்துக்கு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக வந்தடைந்துள்ளது.

இலங்கையின் சரக்கு முனையம் ஒன்றுக்கு வந்த மிகப் பெரிய சரக்குக் கப்பலாக இந்தக் கப்பலை அடையாளப் படுத்த முடியும் என இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது. இதன் சுமை திறன் 240,739.0 தொன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## மத்தியஸ்தசபை நடைபெறாது

யாழ்ப்பாணம், மே 1

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காரணமாக எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த கரவெட்டி மத்தியஸ்தசபை நடைபெறமாட்டாது. அடுத்தவாரம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைபோன்று நடைபெறுமென தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (ச-25)

நாளை
வெள்ளிக்கிழமை -சித்திரை 19
02.05.2025
சுபநேரம் : 05.57 - 07.27
ராகுகாலம் : 10.27 - 11.57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

## காரைநகர் இந்துக் கல்லூரி

**கணிதப்பிரிவு**
பி.சாரங்கன் 2ஏ பி, ரி.விதுஷாலினி 2பி சி

**கலைப்பிரிவு**
ரி.கம்சிகா 2ஏ பி, ஜே. சரண்ஜா 2ஏ சி, அபிராமி ஏ 2பி, பி.டயோசிகா 2பி சி, எஸ். லயனா 3பி, பி. லக்சி 3பி, கே.கயானா 2பி சி, வி.மதுசிகா 2பி சி, கே.அனுஜா பி 2சி

**வணிகப்பிரிவு**
ஏ.ஹர்ணி 2ஏ பி, எம். நித்தியா 2பி சி, என். ஹரணி ஏ 2பி

**உயிர்முறைமைகள் தொழிநுட்பவியல்**
எஸ்.கோபிதா சி 2எஸ், ரி.டனுசிகா சி 2எஸ்

**பொறியியல் தொழிநுட்பவியல்**
எஸ். கஜிந்து 3சி

## கிளி /முழங்காவில் மகா வித்தியாலயம்

**கலைப்பிரிவு**
மகேந்திரன் கம்சா 3ஏ, கதிரேசன் தமயந்தி 3ஏ, முத்து லிங்கம் எழிலழகன் 3ஏ, சின்னராசா சிந்துஜன் 3ஏ, கிருஸ்ண பிள்ளை கலைவாணி 3ஏ, றதீஸ்வரன் நிரோஜன் 3ஏ, குமாரகுலசிங்கம் ஜினோத் 3ஏ, அருமைராசா யுவன்சியா 3ஏ, பங்கிராஸ் மேரி ஜெனிற்றா 3ஏ, குகதாசன் யாழினி 2ஏபி, இஅந்தோனி இஅமலறின்சி 2ஏபி, குகனேஸ்வரன் திசாளினி 2ஏபி, புவனராசா ஜெனோசா 2ஏபி, யோகதாசன் ஜான்சிகா 2ஏபி, குலசேகரம் பானுஜா 2ஏபி, குணராசா பானுஜா 2ஏபி, கண்ணன் காயத்திரி ஏ2பி

**வர்த்தகப்பிரிவு**
சூரியவரராவ் திபோசன் 3ஏ, உவைர் முகம்மது அஸ்ரின் 2ஏபி

**உயிர்முறைமைகள் தொழிநுட்பப்பிரிவு**
ஸ்ரீரங்கநாதன் ஆரணிகா 2பிசி,

**பொறியியல் தொழிநுட்பப்பிரிவு**
சற்குணராசா சுவேதன் 2பிசி, சிவலோகநாதன் தர்மீகன் 2பிசி, ரஞ்சித் குமார் மதுசன் பி2சி, காசிராசா மதுமினி 3சி, பாலசந்திரன் கஜந்தன் 3சி, ஜெகதீஸ்வரன் டிலக்சன் 2சிஎஸ், இராஜசேகர விதுசிகா 3எஸ்

**கணித,உயிரியல் பிரிவு**
நாகராஜன் கார்த்திகன் (கணிதப்பிரிவு) ஏபிசி, மகேஸ்வரன் விசால் (கணிதப்பிரிவு) பி2எஸ், செந்தில்நாதன் மதுவதனி (உயிரியல்பிரிவு) 2சிஎஸ்

## சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**கலைப்பிரிவு**
எஸ்.டிலக்சனா3ஏ, ஆர்.கயந்தி 3ஏ, ஆர்.புவியழகி. 2ஏபி, டி.டெலோமி2ஏபி, என்.லோசனா 2ஏசி
பி.கோபிநாத் 2ஏசி, கே.சதுர்யா. 2ஏசி யு.சர்மியா ஏ2பி, எஸ்.குவேதா 2ஏசி, கே.சேனுயா ஏ2சி, எஸ்.பவதாரணி ஏபிஎஸ், என்.திரிஷா 3பி

**வர்த்தகப் பிரிவு**
ஆர்.ஜெதர்ஷா 2ஏபி

## யாழ்.அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி

**கலைப்பிரிவு**
பி.கிஷானி ஏ2பி, தே.சிவதேவி ஏபிசி, ச.சுமிதா ஏபிசி

## கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் மாணவன் வணிகப்பிரிவில் முதலிடம்



கிளிநொச்சி, மே 1
அண்மையில் வெளிவந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் முழங்காவில் தேசிய பாடசாலை மாணவன் சூரியவரராவ் திபோசன் வணிகப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.
(ச-25,113)

## யாழ்.சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி

**வணிகப்பிரிவு**
சிந்துஜன் 3ஏ, டுபிஷா 3ஏ, கஜகாஜினி 2ஏபி, கஜனி 2ஏபி, சஜித்திரா 2ஏபி, பிரபா 2ஏசி,

**கலைப்பிரிவு**
நமிதா ஏபிசி, டக்சாயினி ஏபிசி, சங்கீதா ஏ2பி, காயத்திரி ஏ2சி, நிஷாந்தினி 2பிசி, ஜனனி பி2சி, டினோஜா ஏபிசி, திலக்சனா பி2சி, ஜென்சனா 2பிசி

**கணிதப் பிரிவு**
பவரதன் பி2எஸ், பிரவீன் 2சிஎஸ், அபிஷ்ணா பிசிஎஸ், அர்ச்சனா பி2எஸ், கிருஷ்ணவி பி2எஸ், வர்ணஜா சி2எஸ்

**விஞ்ஞானப்பிரிவு**
லேகா 3ஏ, சாரங்கன் 3ஏ, பிரணவன் 2ஏபி, பவித்திரா ஏபிசி, அபர்ணா பி2சி, சஞ்சனா ஏ2பி, நிறோஜா 2சிஎஸ், ரேவதி 2சிஎஸ், அரவிந்தன் சி2எஸ், அர்ச்சனா சி2எஸ், தனுஷியா சி2எஸ், அரவிந்தன் பிசிஎஸ், நிதர்ஷனா 2பிசி, ஜெ. நாகசுமி 2பிசி.

## யாழ்ப்பாணக் கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானப் பிரிவு**
பிட்டிநீவி ஜெயக்குமார் 3ஏ, ஷியானுஜா சத்தியசீலன் 2ஏபி, லோகநாதன் டாலினி 2பிசி, பிரியாங்கி கோபாலகிருஷ்ணன் ஏபிசி, நிமலன் டினுசன் பி2சி, நிலவினி நிரஞ்சன் பிசிஎஸ், ஜிஸ்னுகா குகேந்திரன் 3சி

**பௌதீக விஞ்ஞானப் பிரிவு**
கவின் யிர்ஜோ ரசானென் 3ஏ, சிவதரன் லௌஷான் 2ஏபி, சங்கவி கைலாயப்பிள்ளை ஏ2பி, அருள்செல்வம் சனுகா பி2சி, கோகுலதாசன் துவாரகன் பி2சி, சித்தம்பரலிங்கம் நாஹர்த்தனன் 3சி, பேரின்பநாதன் சங்கவன் 3சி

**வர்த்தகப்பிரிவு**
சுகுமாறன் ஜொய்லின் 3ஏ, தட்சானா ரவீந்திரகுமார் 3பி, பிரதீபன் அபினாஷ் ஏபிசி, திலக்ஷஷிகா விஜயராசா பி2சி, மாலாசுதன் சுருதிகா ஏ2சி, ஜீவநாதன் லக்சிகா பி2சி, காசிநாதன் சுஹாசினி 2பிஎஸ்

**கலைப்பிரிவு**
அபிஷாஜினி தேவராசா 2ஏசி, நவரட்ணம் நவினயா ஏ2பி, பாலச்சந்திரன் பிரதீப் ஏபிசி

## யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்

**பௌதீக விஞ்ஞானப் பிரிவு**
வ. கோபிகா பி2சி

**வர்த்தகப் பிரிவு**
கோ. டினோசிகா 2ஏபி, ந. கிறிஸ்ரிகா ஏபிசி

**கலைப்பிரிவு**
கி. கருணிதா ஏ2பி, பா.நிஷாந்தி ஏ2பி, ஆ. யதுஷா ஏபிசி, ச. துலக்ஷனா 3பி



## வவுனியா மாவட்டத்தில் நெளுக்குளம் ம.வி. மாணவி வணிகத்துறையில் முதலிடம்

வவுனியா, மே 1
க. பொ.த உயர்தரப் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய மாணவி பிதுர்சா சற்குணம் வணிகத்துறையில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.
பிதுர்சா தனது கல்விப் பயணம் தொடர்பாகத் தெரிவிக்கையில்,
எனது அப்பா விவசாயம் செய்தே என்னை படிக்கவைத்தார். பல்கலைக்கழகம் சென்று கணக்காளராக வர வேண்டும் என்ற இலக்கை நான் அடைவேன் - என்றார். (ச-33-18)

## யா/அருணோதயக் கல்லூரி

**உயிரியல் பிரிவு**
இ.தக்சன் 3ஏ, உ.மதுசனா ஏ2பி, பு.கேதீசன் ஏபிசி, ம.தரணிகா,பிசிஎஸ், இ.சுமுகன் பிசிஎஸ், த.வரதன் 3சி, மோ.ஆன்மரீனா 2சிஎஸ்

**பௌதீக விஞ்ஞானப்பிரிவு**
சு.சியானிசன் 3ஏ, உ.சோபிதரன் 3ஏ, ம.சுடரகன் ஏ2பி, உ.தயாகரன் ஏபிசி, ஜெ.கம்சன் ஏபிசி, பா.கேதுசா ஏ2சி, ஒ.ஆன்ஜீனுஜா பி2சி, சி.துவிசன் 2சிஎஸ், அ.ருலக்சன் பி2எஸ், வி.இந்துஜா 2சிஎஸ்

**வர்த்தகப் பிரிவு**
அ.அனித்தா 2ஏபி

**கலைப் பிரிவு**
யோ.கோபிநாத் 3ஏ, ஞா.சுலக்சிகா 3ஏ, பு.பவஸ்ரீனா3ஏ, த.விதுஜா 2ஏபி, க.கிரிசாந் 2ஏபி, ம.சரண்ஜா 2ஏபி, பு.சுஜன் 2ஏபி, க.அனோஜா ஏ2பி, பி.தனுஜரிகன் ஏ2பி, கு.டினோஜா ஏ2பி, கு.அபிநயா ஏ2பி, ச.ஆர்த்திகா ஏபிசி, ர.பிரசாந் ஏபிசி, கா.கிருசிகா ஏபிசி, கு.விஸ்வசுந்தரசரமா ஏ2சி, ப.திபியா ஏ2சி
(ச-63, 27, 159,125,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் வடக்கில் கட்டுப்பாட்டுக்குள்

## வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 1**
**ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் வடக்கு மாகாணத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் கேதீஸ்வரன் வசீகரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கடந்த சில மாதங்களாக பன்றிக்காய்ச்சல் வடக்கு மாகாணத்தில் தீவிர நிலையை எட்டியிருந்தது. பருத்தித்துறையில் மூன்று பன்றிப் பண்ணைகளிலும், பச்சிலைப்பள்ளியில் 2 பன்றிப் பண்ணைகளிலும், கிளிநொச்சியில் ஒரு பன்றிப் பண்ணையிலும் பன்றிக் காய்ச்சல் அடையாளம் காணப்பட்டது. பருத்தித்துறையில் உள்ள ஒரு பண்ணையைத் தவிர ஏனைய அனைத்துப் பண்ணைகளும் நீதிமன்ற உத்தரவுபெற்று "சீல்" வைக்கப்பட்டன. பருத்தித்துறையில் அடையாளம் காணப்பட்ட பண்ணை ஒன்றை மூடுவதற்கு நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொற்றை நீக்கிய பின்னர் பன்றி வளர்ப்பை வடக்கில் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதுவரையில் சுமார் 600 பன்றிகள் வடக்கில் இறந்துள்ளன. பன்றிக்காய்ச்சல் பரவாது தடுப்பதற்காக பண்ணைகளில் பன்றிக்காய்ச்சலை அடையாளங் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். தொற்று இல்லை என்று உறுதிப்படுத்திய பின்னரே பன்றியைப் பண்ணையைவிட்டு வெளியே கொண்டு செல்லவும், உள்ளே கொண்டுவரவும் அனுமதிக்கப்படும்.
பன்றிகளைச் சோதனையிடும் செலவீனத்தின் 50 சதவீதத்தை விவசாயிகளின் நலன் கருதி மானியம்மூலம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் -என்றார். (எ-125)

# பருத்தித்துறையில் கஞ்சாக்கடத்தல்; மேலும் மூவர் கைது

யாழ்ப்பாணம், மே 1
இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் கடத்திவரப்பட்ட 322 கிலோ 860 கிராம் கேரளக் கஞ்சா பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து கைப்பற்றப்பட்ட சம்பவத்தில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வடக்குக் கடல் வழியாக கடத்தப்பட்ட கேரளக் கஞ்சா பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து படகொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டதுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.
இந்தநிலையில் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் பலாலிப் பகுதியைச்சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-100)

# பாடத்திட்டத்தில் தேர்தல் பாடம்

கொழும்பு, மே 1
பாடசாலை பாடத்திட்டத்தில் தேர்தல் பாடங்களை இணைப்பதற்கு தேசிய தேர்தல் ஆணையகம் கல்வி அமைச்சகத்துடன் பேச்சுகளைத் தொடங்கியுள்ளது.
பொதுமக்களிடையே அரசியற் கல்வியறிவை அதிகரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
அதன்படி, தரம் - 08 பாடத்திட்டத்தில் தேர்தல் கல்விகளை இணைக்கத் திட்டங்கள் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)

# கதிர்காமத்துக்கு யாத்திரை

யாழ்ப்பாணம், மே 1
தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமக்கந்தன் ஆலயத்தைநோக்கிய பாதயாத்திரை இன்று வியாழக்கிழமை காலை செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் ஜெயாவேல் சாமி தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.
வரலாற்றுப் புகழ்மிகு கதிர்காமக்கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் விழா எதிர்வரும் ஜூன் மாதம்26 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அதனையொட்டியே குறித்த யாத்திரை வழமைபோன்று இவ் வருடமும் முன்னெடுக்கப்படுகின்றது. (ச-66)



# பச்சை மிளகாய் விலை சரிவு

யாழ்ப்பாணம், மே 1
யாழ்.குடாநாட்டில் பச்சை மிளகாயின் விலை திடீரெனச் சரிந்துள்ளது.
கிலோ 600 முதல் 900 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட பச்சை மிளகாய் தற்போது கிலோ 150 ரூபாவாக விற்கப்படுகிறது. சந்தைக்கு அதிகளவான பச்சை மிளகாய்கள் வந்துசேர்வதால் அவற்றின் விலை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-25, 17)

## கூட்டு வன்கொடுமை
# ஐவர் கைது

கொழும்பு, மே 1
45 வயதுடைய பெண்ணொருவர் கடத்தப்பட்டு கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக வெலிபென்ன பொலிஸாரால் ஐவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண் அளித்த முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 19, 23, 24 மற்றும் 38 வயதுடையவர் கள்'என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)





**கும்பிடப்போற இடத்திலையும் குறுக்கால மறுக்கால குறளி வித்தை காட்டிறவையால, சனங்கள் நிம்மதியாக் கும்பிடவும் ஏலாத காலமாப் போட்டுது. இந்தக் கிழமை யாழ்ப்பாணம் ரவுணில இருந்து கொஞ்சம் தள்ளி இருக்கிற ஊர்க்கோயில் ஒண்டில கொடியேத்தம். வழக்கமா கோயில் திருவிழா எண்டால் தேருக்கும், கொடியேத்தத்துக்கும்தான் சனங்கள் கூடுதலாப் போறவை. அதைமாதிரி இந்தக் கொடியேத்தத்துக்கும் நல்ல சனம். சனங்களும் பத்திரகாளி அம்மன்ர அருள் கிடைக்கோணும் எண்டு, நெஞ்சுருகிக் கும்பிட்டுக்கொண்டிருக்கேக்க, திடீரெண்டு எல்லாரையும் தள்ளிக்கொண்டு முன்னுக்கு வந்து ரண்டு கையையும் விரிச்சு, பக்திப்பழம் மாதிரி ஒருத்தர் கும்பிடத் தொடங்கினார். அவருக்குப் பின்னால இன்னும் நாலைஞ்சு பேர் சனத்துக்குள்ளால பாய்ஞ்சு வந்திச்சினம். அதில ஒருத்தர் லைட் பிடிக்க, இன்னொருத்தர் வீடியோ எடுக்க கும்பிட்டுக்கொண்டிருந்தவர் "அப்பிடி எடு, இப்பிடி எடு, இந்த பக்கம் கமெரா வைத் திருப்பு" எண்டு ஓர்டர் போட்டிட்டுத் திரும்பவும் "பத்திரகாளித் தாயே.." எண்டு கண்ணை மூடிக் கும்பிடத் தொடங்கிட்டார்.**

**சனத்துக்கு தங்களைச் சுத்தி என்ன நடக்குது எண்டு முதலில விளங்கேலை. இப்பிடி தடாலடியா ஜீன்ஸோட வந்து சேர்ட்டைக்கழட்டி இடுப்பில கட்டிப்போட்டு, கொடிக் கம்பத்தோட நிண்டு கும்பிட்டவரை ஊர்ச்சனத்துக்கு நல்லாத் தெரியும், அவரும் அந்த ஊர்தான். ஆனால் கனகாலத்துக்கு முதலே வெளிநாட்டுக்குப் போய், அப்பிடியே இந்தியாவில நடிக்கப்போய் ஆள் கொஞ்சம் பேமஸ். ஆனால் அவர் நடிச்ச ஒரேயொரு படம்தான் வெற்றி. அதுக்குப் பிறகு எல்லாப் படமும் கவிண்டு கொட்டுண்ட, தானே இயக்கிப் படம் எடுத்துப் பார்த்தார், அதுவும் சரிவரேலை. இப்ப சீரியலில நடிக்கிறார். அப்பிடியிருந்தும் இன்னும் ஆளுக்கு படத்தில நடிக்கிற ஆசை போகேலை. அவர் இப்ப எடுக்கிற படமொண்டில தங்கட ஊர்க்கோயிலைப் புகழ்ந்து பாடுறமாதிரி ஒரு பாட்டுவைச்சிருக்கிறாராம். அதுக்குத்தான் வீடியோ எடுக்க இப்பிடி கொடியேத்தத்தில வந்து நிண்டு அலப்பறை செய்திருக்கிறார்.**

**இதோட அவரின்ர ஷூட்டிங் முடியேலை. அதுக்குப் பிறகு சாமி வாகனத்தில வெளிவீதி சுத்திவரேக்க, இந்த நடிகர் போய் காவங்கு தூக்கிக்கொண்டிருந்தவரைத் தள்ளிவிட்டிட்டு தான் போய் தூக்கத்தொடங்கிட்டார். சாமி காவின மற்றவை இதைப் பார்த்திட்டுக் குழம்ப, "வீடியோ எடுக்கினம் அதுக்காகத்தான்" எண்டு சொல்லிச் சமாளிச்சு தொடர்ந்தும் காவங்கு தூக்கிறமாதிரி போஸ் குடுத்திருக்கிறார். பிறகு அவரின்ர ஷூட்டிங்குக்கு எண்டு கொழும்பில இருந்து டான்ஸ் ஆடுற பொம்பிளையளும், ஆம்பிளையளும் சாமி வீதிவலம் வரேக்க முன்னுக்கு நிண்டு, படத்தில வாற பாட்டை பெரிசா போட்டிட்டு அதுக் கேத்தபடி ஆடத்தொடங்கிட்டினம். கொடியேத்தத்துக்கு வந்த சனத்துக்கு "திருவிழாவுக்கு வந்தமோ இல்லாட்டி சினிமா ஷூட்டிங் பார்க்க வந்தமோ?" எண்டு சினம் வரத் தொடங்கிட்டுது. எல்லாரும் விரதகாரர். விடியச் சாப்பிடாமல் வந்து திருவிழா முடியத்தான் வீட்டை போய் அவை சாப்பிடவேணும். இது விளங்காமல் சாமி வரேக்க முன்னால நிண்டு பாட்டைப்போட்டு, ஷூட்டிங் எண்டு கூத்தாடினால் இன்னும் லேட்டாகுமெல்லோ. "அந்த நடிகர் எங்கட ஊர்தான். அவருக்கும் கோயிலில பக்தி இருக்கு. சப்பறத் திருவிழா அவையின்ரதான். ஆனால் இப்பிடி ஷூட்டிங் எடுக்கிறதெண்டால், அது திருவிழா இல்லாத இன்னொரு நாளிலதான் எடுக்கோணும். இப்பிடி வீதி வலம் வரேக்க சிங்களப் பொம்பிளையளை ஆடவிட்டு வேடிக்கை காட்டுறதெல்லாம் அம்மனுக்கே பொறுக்காது" எண்டு கொடியேத்தத்துக்கு வந்தவை புறுபுறுத்துக்கொண்டு போட்டினம். கோயில்காரர் இனியாவது உப்பிடியான வேலையளுக்கு இடம்குடுக்காமல், கோயிலின்ர புனிதத்தையும் அம்மன்ர மகிமையையும் காப்பாத்துவினமோ?**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திறப்புவிழா

கொடிகாமம், மே 1

இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான மாதிரி கணித செயற்பாட்டறைத் திறப்புவிழா அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆங்கிலபாட மற்றும் வெளிநாட்டு மொழிகள் ஆரம்பக்கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் ப.சுதர்சன், சிறப்பு விருந்தினர்களாக வன்னிகோப் கட்டுப்பகுதிப் பொறியியலாளர் எஸ்.லாவன்யன், வன்னிகோப் வடமாகாண இணைப்பாளர் செ.செல்வதாசன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-41-159)



"விதையனைத்தும் விருப்பமே" செயற்றிட்டம் ஊடாக ஜேர்மனி நாட்டில் வசிக்கும் கிறிஸ்டோபர் செல்வஸ்டீபனின் 23ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மலரும் மூளாய் அமைப்பினரால் தெரிவுசெய்யப்பட்ட கற்றல் மற்றும் விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்குகின்ற வறிய மாணவர்கள் 15பேருக்கு சப்பாத்துகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-41-27)



பளை இயக்கச்சி மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றன. (ச-25,9)



# வாக்குச்சாவடி நடைமுறை ஆய்வறிக்கை வெளியீடு!

தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச ஒன்றியத்தின் ஏற்பாட்டில், இலங்கைக்கான ஆஸ்திரேலியா உயர்ஸ்தானிகராலயத்தின் நிதியனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வாக்குச்சாவடிகளில் இயலாமைகளைக்கொண்ட நபர்களுக்கான அணுகல் வசதி தொடர்பான ஆய்வறிக்கை வெளியீடு கடந்த புதன்கிழமை யாழ்ப்பாண நகர்ப்பகுதியிலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது. ஆய்வறிக்கையின் முதற்பிரதியை யாழ். மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் பெற்றுக் கொண்டார். (ச-41-159)




மூளாய், பொன்னாலை ஆகிய கிராமங்களில் 2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், கராத்தே போட்டியில் தேசியமட்டத்தில் வெற்றியீட்டி சர்வதேச போட்டிக்குத் தெரிவான மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் தையல் பயிற்சிநெறியினை நிறைவுசெய்த மாணவர்களால் உருவாக்கப்பட்ட தையல் பொருள்களின் கண்காட்சியும் மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றன. (ச-22, 27)

# கரைதுறைப்பற்றில் தமிழரசு பரப்புரை

முல்லைத்தீவு, மே 1

கரைதுறைப்பற்று உள்ளூர் அதிகாரசபையின் கீழுள்ள, கரிக்கட்டுமூலை கிழக்கு வட்டாரத்தில், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தேர்தல் பரப்புரைக்கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. கூட்டங்களில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் பங்கேற்றார். கரிக்கட்டுமூலை கிழக்கு வட்டாரத்தின் கீழ் காணப்படும் செம்மலைகிழக்கு(நாயாறு), செம்மலை, அளம்பில், உடுப்புக்குளம் ஆகிய கிராமங்களில் இவ்வாறு தேர்தல் பரப்புரைக்கூட்டங்கள் இடம்பெற்றன. (ச-25, 246)





# நீர்வேலிக் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 1

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நீர்வேலிக் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்தும் 19 தினங்கள் காலை, மாலை உற்சவங்களுடன் இடம்பெறவுள்ளது. அடுத்த மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 12 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-25,66,17)




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வாராந்த சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு கலாசாலையின் கணித விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலா முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
13 . 05 . 1947



மறைவு
11 . 05 . 2024

கைதடி கிழக்கைச் சேர்ந்த

## அமரர் வேலுப்பிள்ளை விசுவநாதர்

(முன்னாள் பிரதேச சபை ஊழியர்-சாவகச்சேரி, உரிமையாளர்-சுமித்திரன் ஸ்ரோர்ஸ்,கிருஷ்யா பல்பொருள் அங்காடி.

திதி :-சித்திரை சதுர்த்தி

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்,
ஆறவில்லை ஐயா உங்கள் இழப்பு. பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாக
எங்களுடன் சகல செல்வங்களுடன் வாழ்ந்த எங்கள் குடும்ப தீபமே?
நீங்கள் எங்கே ஐயா எம்மை விட்டுச் சென்றீர்கள்?
நீங்கள் உலா வந்த வீதி எல்லாம் இங்கே பாசி படர்ந்ததையா.
இன்னும் பல வருடங்கள் எம்முடன் வாழ்வீர்கள் என நாம் இருக்க, ஏன் ஐயா
அந்தக் காலன் உங்களைக் கவர்ந்து சென்றான்?
பட்ட மரங்கள் இருக்க, பச்சை மரத்தை கவர்ந்தது ஏனோ?
நீங்கள் கண்ட கனவுகளையெல்லாம் உந்தன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளின் தோள்களில் இறக்கி வைத்து விட்டு
இறைவனடி சேர்ந்தாயே?
எங்களின் விடிவெள்ளியே?
அல்லும் பகலும் உங்களை நினைக்காத நேரமில்லை
நீங்கள் நடந்து திரிந்த வீட்டில் படமாக வாழ்கின்றீர்கள். எங்கு பார்த்தாலும் உங்கள்
அழகு முகம் தானே எங்கள் கண் முன்பே தோன்றுகின்றது.
நீங்கள் எம்மை விட்டு இறைவனிடம் விண்ணுலகு சென்றாலும்
எங்கள் நினைவை விட்டு என்றும் மறையாமல் எம்முடன் வாழ்ந்து கொண்டேஇருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி
மற்றும் உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 - 04 - 1949



மறைவு 29 - 04 - 2025

## இராஜேஸ்வரி செல்வரத்தினம்

சுதுமலை மேற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் கேணியடி வயிரவர் கோவிலடி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி செல்வரத்தினம் அவர்கள் கடந்த (29.04.2025) செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசன் - சரஸ்வதி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான தியாகராசா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும் தக்ஷாயினி (ஆயுள்வேத மருத்துவ உத்தியேகத்தர், இலவச சித்த மருந்தகம் - புங்குடுதீவு பிரதேசசபை - வேலணை) யின் பாசமிகு தாயாரும் குகன் (சுதுமலை) இன் பாசமிகு மாமியாரும், ஜெகதீஸ்வரியின் அன்புச் சகோதரியும், சண்முகராஜா, காலஞ்சென்ற கமலநாதன், மற்றும் ஜெகதீஸ்வரன், மனோகரன், பிரபாகரன், காலஞ்சென்ற இராஜேந்திரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், லதுஷான், தாகித்தியா, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.05.2025 வியாழக்கிழமை காலை 9.00 க்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக காலை 11.00 க்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு :- 0777286824

(CS 2878) A

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 03 . 1945



மறைவு 29 . 04 . 2025

## அருள்பிரகாசம் அருள்லீல்லி நாயகம்

(சமாதான நீதவான், பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருள்பிரகாசம் அருள்லீல்லி நாயகம் (சமாதான நீதவான், பண்டத்தரிப்பு) அவர்கள் நேற்றுமுன்தினம் (29.04.2025) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அருள்பிரகாசம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நீக்கிள்ாப்பிள்ளை - யோசப் பாசமிகு மருமகனும், இந்திரா அருள்லீல்லிநாயகம் அவர்களின் பாசமிகு கணவரும், அனஸ்ரன் மயூரன், ஜோய் டிலக்ஷன், ஆண்சுலக்ஷனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி (06.05.2025) செவ்வாய்க்கிழமை அந்தோனியர் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
0094 77 003 2657
076 949 2335
ஜோய் (மகன்) +49 176 317 88280

(CS/58137) J-1

# பெண்கள் முதலிடம்

கொழும்பு, மே 1

உயர் கல்வித்துறையிலும் உயர் பதவிகளிலும் ஆண்களைவிட பெண்களே முன்னணியில் திகழ்வதாக மத்திய வங்கி அறிக்கை தெரிவித்துள்ளது.

குறிப்பாக நிர்வாகத்துறையில் உயர் பதவிவகிக்கும் பெண்களின் எண்ணிக்கை 59 % எனவும் ஆண்களின் எண்ணிக்கை 37% எனவும் மத்திய வங்கி அறிக்கை தெரிவிக்கிறது.

இடைநிலை நிர்வாகத்துறையில் பெண்களைவிட ஆண்களின் எண்ணிக்கை கூடுதலாகக் காணப்படுகிறது. இடைநிலை நிர்வா கத்துறையில் பெண்களின் எண்ணிக்கை 37% ஆகவும் ஆண்களின் எண்ணிக்கை 63% ஆகவும் காணப்படுகிறது. (ச-6)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

077 334 1281

## வீடு வாடகைக்கு

யாழ் கந்தர்மடம் மணற்தறை
ஒழுங்கையில் நவீன வசதிகளுடன்
கூடிய புதிய வீட வாடகைக்கு உண்டு.
வெளிநாடு செல்வதனால் உடனடியாக
தொடர்பு கொள்ளவும்
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 076 528 1527, 076 697 0529
075 358 2856

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| ➢ Sales Assistant | : 0707072944 |
| ➢ Tele Calling(Fulltime,parttime,online) | : 0770079053 |
| ➢ Office Admin,Video Presenter | : 0779969661 |
| ➢ Accounts Executive (Female) | : 0772849686 |
| ➢ Counter Sales Assistant | : 0752217661 |
| ➢ Telesales Executive | : 0112572727 |
| ➢ Cafe Assistant/Cashier | : 0766587149 |
| ➢ Technician | : 0763594362 |
| ➢ Graphic Designer/ TO | : 0758800143 |
| ➢ விற்பனையாளர்கள் | : 0776653323 |
| ➢ இயற்கை வழி விவசாயி | : 0757545675 |

மேலதிக யாழ், வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையக
வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com
வேலையாட்கள் தேவையா : 0760984532
DEWMAS, 51, Amman Road, Nallur

## Angel International School, Manipay

VACANCY

English Teacher

Qualifications

* B.A. in English / HNDE
* Salary: Negotiable

Contact us: 021 225 5628

Submit your CV to
angelism2006@gmail.com
on or before
02.05.2025

Angel International School, Mathers Lane, Manipay

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 1

அராலி கிழக்கு மலையாளங்காடு ஜயனார் கோவிலில் சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளை யாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-3 நாளை வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசனின் "திருநகரங் கண்ட படலம்" எனும் சொற்பொழிவும் இடம்பெறும்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-41)

## தங்குமிட விடுதியும், மண்டபமும் வாடகைக்கு உண்டு




கல்வியங்காட்டில் விளையாட்டரங்க வீதியில் (GPS - Road) தங்கும் விடுதியும், நிகழ்வுகளுக்கான மண்டபமும் வாடகைக்கு உண்டு.

077 930 0083
076 525 4405

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினப் பேரணிகளில் பலம்காட்டும் கட்சிகள்

கொழும்பு, மே 1

உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் அமோக ஆதரவைப் பெறும் வகையில், ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் இன்று மேதினப் பேரணிகளை நடத்தவுள்ளனர்.

சர்வதேச தொழிலாளர் தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி மே தினக் கூட்டத்தை பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு காலிமுகத்திடலில் நடத்தவுள்ளது. 'நாட்டைக் கட்டியெழுப்பும் மக்கள் சக்தி அணிதிரளும் மேதினக் கூட்டம்' எனும் தொனிப்பொருளில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர்கள் உட்பட தேசிய மக்கள் சக்தியின் பிரமுகர்கள் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

எதிர்க்கட்சியில் இருந்தபோது மே தினக் கூட்டத்தையும், பேரணியையும் மிகவும் நேர்த்தியான முறையில் நடத்தும் கட்சி என்ற பெருமையை ஜே.வி.பி. பெற்றிருந்தது. இம்முறை முதல்முறையாக, ஆளுங்கட்சி என்ற அந்தஸ்துடன் மே தினக் கூட்டத்தை அந்தக் கட்சி நடத்துகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் இணைந்து மேதினக் கூட்டத்தையும், பேரணியையும் தலவாக்கலையில் நடத்தவுள்ளது.

'ஏமாந்தது போதும், தற்போது விழித்தெழுவோம்' எனும் தொனிப்பொருளில் பெரமுனவின் மேதினப் பேரணி நுகேகொடவில் நடைபெறவுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மருதானையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் மேதினக் கூட்டத்தை நடத்தவுள்ளது. முன்னிலை சோஷலிசக் கட்சியின் மேதினக் கூட்டம் கிருளப்பனையில் நடைபெறவுள்ளது.

கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலேயே பிரதான கட்சிகளின் மே தினக் கூட்டம் நடைபெறுகின்றது. இதனால் கொழும்பு மாவட்டத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (அ-ம-44)

## பல்கலை...

இது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன தெரிவித்ததாவது:-

இம்மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் பல்கலைக்கழக மாணவர்கள் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்படவேண்டும். இதற்காக, எதிர்வரும் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் அனைத்துப் பல்கலைக்கழகங்கள், வளாகங்கள் மற்றும் நிறுவகங்களில் பயிலும் மாணவர்களுக்கு விடுமுறை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-26)

## அத்துமீறிய...

இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். யாழ்ப்பாணம் நெடுந்தீவில் நேற்று நடத்திய மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்த போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான பொறிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அத்துமீறிய மீன்பிடிக்கு எதிரான நடவடிக்கை எடுக்கும். எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதில் நாங்கள் அக்கறையுடன் உள்ளோம். இது தொடர்பில் கடற்படையினருக்கும் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-26)

## எரிபொருள்...

அடிப்படையில் 92 ஒக்ரேன் பெற்றோலின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள்களுக்கான தனது மாதாந்த விலைச்சூத்திரத்தை நேற்றுப் புதுப்பித்தது. இதன் அடிப்படையிலேயே 92 ஒக்ரேன் பெற்றோலின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 293 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 95 ஒக்ரேன் பெற்றோலின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 341 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் டீசலின் விலை 12 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 274 ரூபாவும், ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 325 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விலையும் லீற்றர் ஒன்றுக்கு 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலையாக 178 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## வீதியில்...

ழந்தார். இந்தச் சம்பவம் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கோண்டாவிலைச் சேர்ந்த கந்தசாமி கலியுகவரதன் (வயது-55) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். காலையில் உணவருந்தாமல், சைக்கிளில் வெளியே சென்ற அவர் வெப்பத்தால் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாகவே மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## எரிவாயு...

லாப்ஸ் எரிவாயு சிலிண்டரின் விலை ஆயிரத்து 645 ரூபாவாகவும் பேணப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## கூரைவேய...

உயிரிழந்துள்ளார். ஜோர்ஜ் அன்ரனிதாஸ் (வயது - 60) எனும் முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 20ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு மருத்துவமனையில் வழங்கப்பட்ட முதற்கட்ட சிகிச்சையைத் தொடர்ந்து, அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## ஜி.எஸ்.பி....

ஜி.எஸ்.பி. பிளஸ் மீளாய்வு நடவடிக்கைக்காக இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி அநுர தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போதே, இலங்கைக்குச் சாதகமான தீர்மானங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் கருத்துக் கூறியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிரிவுக்கான தலைவர் சாள்ஸ் வைட்லி மேலும் தெரிவித்ததாவது:-

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு, வர்த்தக ரீதியான பல வெற்றிகளை அடைய உதவியுள்ளது. தொடர்ந்தும் வர்த்தக வெற்றிகளை அடைவதற்காக இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தயாராக உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்காகக் கருத்திற்கொள்ளப்படும் அளவுகோல்கள் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை அல்லது பொதுவான விருப்பத்தேர்வு முறை தொடர்பான 27 சர்வதேச இணக்கப்பாடுகளை செயற்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் நல்ல விதத்திலேயே உள்ளது - என்றார்.

இதன்பின்னர் உரையாற்றிய ஜனாதிபதி அநுர, இலங்கை பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார். இலங்கையின் பொருளாதார ரீதியில் சரிவடைவதற்கு முன்னைய ஆட்சியாளர்களின் அரசியல் முறையும், வீண்விரயமும், மோசடியுமே காரணமாக அமைந்திருந்ததாகவும், இப்போது நாடு மீண்டும் சரியான நிர்வாகத்தைக் கொண்டதாக மாற்றப்பட்டுவருவதாகவும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ம-இ)

## வாக்காளர்...

கைதுசெய்யப்பட்டுள்ளனர். பூந்தோட்டம் பகுதியில் உள்ள பலசரக்கு வியாபார நிலையம் ஒன்றில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குரிய வாக்காளர் அட்டைகள் இருப்பதாக தேர்தல் திணைக்களத்துக்கு நேற்றுமுன்தினம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் ஒருதொகை வாக்காளர் அட்டைகளையும் மீட்டுள்ளனர். இதையடுத்து அவற்றை உடமையில் வைத்திருந்த குற்றத்துக்காக கடையின் உரிமையாளரைக் கைதுசெய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான விசாரணைகளின் அடிப்படையில் அந்தப் பகுதிக்குரிய தபால் ஊழியரும் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட வியாபாரநிலைய உரிமையாளரின் சகோதரன், தேசியமக்கள் சக்தியின் வவுனியா மாநகரசபைக்காக போட்டியிடும் வேட்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-18-110)

## பிள்ளையான்...

பதற்கு தற்போது முயற்சிக்கின்றனர் என்று ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பேராசிரியர் ஒருவரைக் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே பிள்ளையான் கைதுசெய்யப்பட்டுள்ளார். பிள்ளையான் செய்த குற்றம் அது மட்டுமல்ல. அவர் பல குற்றங்களைச் செய்துள்ளார். புலிகள் அமைப்பில் இருந்த காலத்திலும் குற்றங்களை இழைத்துள்ளார்.

புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறிய பின்னர், ராஜபக்சக்களின் ஒப்பந்தத்தின் பிரகாரம் பல குற்றங்களை பிள்ளையான் செய்துள்ளார். எனவே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளதால் ராஜபக்சக்கள், ரணில் ஆகியோர் பீதியில் உள்ளனர்.

அவர்களின் கதைகள் பிள்ளையானுக்குத் தெரியும். எனவே, பிள்ளையான் வாய் திறக்க ஆரம்பித்தால் சிக்கல் வரும் என்பதும் அவர்களுக்குப் புரியும். பிள்ளையான் 90 நாள்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். தமக்குத் தெரிந்தவற்றை கூறுவதற்கு பிள்ளையானுக்கு வாய்ப்புள்ளது. அதேபோல விசாரிப்பதற்கு அதிகாரிகளுக்கும் போதிய அவகாசம் உள்ளது - என்றார். (அ-ம-44)

## நிர்வாகச்...


யின் அவசர சிகிச்சைப் பிரிவில் தனிநபர் ஒருவர் அத்துமீறி நுழைந்து மருத்துவர்களுக்கும், தாதியர்களுக்கும், ஊழியர்களுக்கும் உயிரச்சுறுத்தல் விடுத்திருந்தார். அந்த நபருக்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன், மருத்துவ நிபுணர்களின் ஒருமித்த சேவையை நோயாளர்களுக்கு வழங்க இயலாத வகையில் புறச்சூழ்நிலைகளை உருவாக்கும் செயற்பாடுகளும், நிபுணர்களால் முன்மொழியப்படும் சிகிச்சைத் திட்டங்களை உரிய தரப்புகளுடன் கலந்துரையாடாமல், எதேச்சதிகாரமாக நிராகரிக்கும் செயற்பாட்டிலும் மருத்துவமனை நிர்வாகம் ஈடுபட்டுவருகின்றது.

அத்துடன், புற்றுநோய் சிகிச்சை மற்றும் மனநல சிகிச்சை பிரிவுகளை திறம்பட நிர்வகிக்கத் தவறியமை, மருத்துவமனையின் அபிவிருத்தியில் பங்காற்றக்கூடிய முக்கியமான நிர்வாகக் கூட்டங்களில் நீண்ட காலமாக பங்கேற்காமை, பொறுப்புகள் வகிப்பதில் இருந்து விலகியுள்ளமை, நோயாளர் சங்க சேமிப்பு நிதியை, நோயாளர்களின் மருத்துவ தேவைகளுக்காகப் பயன்படுத்தத் தவறியமை, புற்றுநோயாளர்களின் நன்மைக்காக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் முன்மொழிந்த திட்டங்களில் தடைகள் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளும் மருத்துவமனை நிர்வாகத்துக்கு எதிராகக் காணப்படுகின்றன.

எனவே, இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் நிவர்த்திசெய்து, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையை மிகச்சிறந்த மருத்துவமனையாக மாற்றவேண்டும் என்ற வலியுறுத்தல்களை முன்வைத்து இந்த தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் - என்றனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### பிரான்சிஸ் சேவியர் ஸ்பென்சர் ஜோசவ் (ராஜா)


யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் நோர்வே (பேர்கன்) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் சேவியர் ஸ்பென்சர் ஜோசவ் (ராஜா) 29.04.2025 அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான பிரான்சிஸ் சேவியர் மற்றும் லில்லி ஆகியோரின் அருமை மகனும் கிறேத்த பிரான்சிஸ் சேவியர் (நோர்வே) (கீர்த்தியின்) பாசமிகு தந்தையும், காலம் சென்ற புளோறன்சியா (ஜொய்சி), விவியன், மேரி பெனிக்னா (பபா), கிளறன்சியா (ரதி) (கனடா), புளோறிடா (மதி) (ஜேர்மனி) மற்றும் றுபீனா (ராஜி) (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் றெஜி சொலமன், இராஜநாயகம், பிலிப், அன்ரனி (கனடா), தாசன் (ஜேர்மனி), பாஸ்கரன் (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 0767754591 0769810545

321/10 பாங்சால் வீதி
கதீற்றல் லேன்
யாழ்ப்பாணம்

## இரத்ததான முகாம்



யாழ்ப்பாணம், மே 1

கொழும்புத்துறை இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், இரத்ததான முகாம் வளன்புரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற வுள்ளது.
கொடையாளர்களை குருதி வழங்கி உதவுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள் ளனர். (ச-25)

## சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், மே 1

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீர கத்தி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி உற்சவம் இன்று வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு ஆரம்பமாகி நடை பெறவுள்ளது. சிறப்பு அபிஷேகம், வழிபாடுகளைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று சுவாமி வெளிவீதி உலா வருவார். (ச-25, 17)

## உடனடி வேலைவாய்ப்பு

**பாதுகாப்பு உத்தியோகத்தர் (Security guard)**

**இருபாலையில் இயங்கும் தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு போக்குவரத்து ஒழுங்கை மேற்கொள்ள ஒருவர் தேவை.**

- வாரத்தின் 4 நாட்கள் மட்டுமே வேலை.
- அண்மையில் வசிக்கும் 50-60 வயதிற்குட்பட்ட ஆண் விரும்பத்தக்கது.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 303058)

தொடர்பு: 077 605 9650

## காணி விற்பனைக்கு

வசாவிளான் கிழக்கில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

077 387 0140

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S றோட், சுன்னாகம்.

**BARATHY**
பிரதான வீதி, சித்தங்கேணி.

எமது மூன்று நிறுவனங்களிலும் A/L 2024 கலை , வர்த்தகப் பிரிவில் அதி உயர் பெறுபேறுகளைப் பெற்று உங்கள் பாடசாலைக்கும் எங்கள் நிறுவனத்திற்கும்பெருமையீட்டித் தந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்திக் கொள்கின்றோம். இதே போன்று நீங்களும் சிறந்த பெறுபேறுகளை பெற்றிட ஆரம்பமாகின்றது.

**A/L DAY CLASS**
**கலை-வர்த்தகப் பிரிவு**

ஆரம்பம்-யாழ் நகரிலும் சுன்னாகத்திலும் 02.05.2025- காலை 08.00 மணி உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாணம்-077 220 9651
சுன்னாகம்-075 916 0417
சித்தங்கேணி-077 169 2446



ஆர்வமும் திறமையும் கொண்டவரா நீங்கள்? இது உங்களுக்கான வாய்ப்பு!

- **RECEPTIONIST**
  வரவேற்பாளர்
- **VIDEO EDITOR**
  **GRAPHIC DESIGNER**
  Video Editing & Photoshop போன்றவற்றில் அடிப்படை அறிவு போதுமானது.
- **ANCHOR**
  **VOICE ARTIST**
  செய்திகளுக்குக் குரல் கொடுப்பதற்கும், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கவும் கூடிய குரல்வளம் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- **REPOTER**
  **SUB EDITOR**
  களச் செய்திச் சேகரிப்பு, இணையத்தள செய்திப் பதிவேற்றத்தில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- படிக்க விரும்புபவர்களுக்கும் வாய்ப்பு.
- திறமையும், ஆர்வமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

LOCATION

**நேர்முகத் திகதி: 03.05.2025 (சனிக்கிழமை)**
**நேரம்: காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை**
**இடம்: 'உதயன்' அலுவலகம். 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

**SLIIT உயர்கல்வி நிறுவனத்தின்**

# BSc (Hons) in IT & BBA (Hons)

**இளமாணி பட்டப்படிப்புகளுக்கான அனுமதிகள் ஆரம்பம் - 2025**

MAIN INTAKE 2025 | 4 YEARS

வடக்கில் தரமான கல்வியுடன் உறுதியான வேலை வாய்ப்பு எமது SLIIT NORTHERN UNI இல் மட்டுமே!

Visit our Website

SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna

021 7534 807

northernuni.lk apply@northernuni.com



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org